பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
09 09 2026 WEDNESDAY 12 40 PM ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய ஊட்டச்சத்து மாத விழிப்புணர்வு நிகழ்ச்சியை மத்திய அமைச்சர் திருமதி. அன்னபூர்ணா தேவி, உத்தரபிரதேச மாநிலம், வாரணாசியில் இன்று தொடங்கி வைத்தார்.

2. தமிழகம், புதுச்சேரி மற்றும் மேற்குவங்கத்தில் உள்ள ஐந்து சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

3. சவுதி அரேபியா மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

4. அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 600 பொருட்கள் மீது, 50 சதவீதம் வரை, வரி விதிக்கப்படும் என்று கனடா அறிவித்துள்ளது.

5. வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Sharma மற்றும் Malvika Bansod காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>>>><<<<<<<<

தேசிய ஊட்டச்சத்து மாத விழிப்புணர்வு நிகழ்ச்சியை மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாமட்டுத்துறை அமைச்சர் திருமதி. அன்னபூர்ணா தேவி, உத்தரபிரதேச மாநிலம், வாரணாசியில் இன்று தொடங்கி வைத்தார்.

இதனையொட்டி, நாடுமுழுவதும் உள்ள அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள் மற்றும் பஞ்சாயத்துகளில் ஊட்ட சத்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

“நமது அங்கன்வாடி மையங்கள் - நமது பொறுப்பு” என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும்,

அங்கன்வாடி மையங்களில் ஊட்டச்சத்து மிக்க உணவுகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் திருமதி. அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் ஊட்டச்சத்து மாதம் கடைபிடிக்கப்படுவதாக தமிழகத்தின் கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர் டாக்டர் அருள்பிரசாத் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - அருள்பிரசாத் 40 செகண்ட்ஸ்)*

>>>>>>><<<<<<<

தமிழகம், புதுச்சேரி மற்றும் மேற்குவங்கத்தில் உள்ள 5 சட்டப்பேரவை தொகுதிகளில் அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய வரும் 16ஆம் தேதி கடைசி நாளாகும். அதற்கு அடுத்த நாள் மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும்.

வேட்புமனுக்களை திரும்ப பெறுவதற்கு வரும் 19ஆம் தேதி கடைசி நாளாகும்.

பதிவான வாக்குகள் அடுத்த மாதம் 9ஆம் தேதி எண்ணப்பட்டு, அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்படும்.

தமிழகத்தில் மதுராந்தகம், தாராபுரம் மற்றும் புதுச்சேரியில் தட்டாஞ்சாவடி, மேற்குவங்கத்தில் Reginagar, Nandigram ஆகிய சட்டப்பேரவை இந்த தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது.

மேலும், அஸ்ஸாமில் Nagaon நாடாளுமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலும் இன்று தொடங்கியது.

>>>>>>><<<<<<<

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் □ா, பரம்வீர் சக்ரா விருதுபெற்ற கேப்டன் விக்ரம் பத்ரா-வின் பிறந்த நாளையொட்டி மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், 24வது வயதில் நாட்டுக்காக இன்னுயிர் ஈந்தவர் கேப்டன் விக்ரம் பத்ரா என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

ஹிந்தி இலக்கிய உலகின் புகழ்பெற்ற எழுத்தாளர் Bharatendu Harishchandra-வின் பிறந்த நாளையொட்டியும் அவருக்கு திரு. அமித் □ா மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், மகளிர் கல்வி, சமூக சீர்திருத்தத்திற்கு ஆதரவாக விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் இவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா வெளியிட்டுள்ள பதிவில், ஹிந்தி இலக்கிய உலகிற்கு புதிய பாதையை வகுத்தவர் Bharatendu Harishchandra என்று தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பொதுவாழ்வில் 25 ஆண்டுகள் நிறைவு செய்துள்ளதை கொண்டாடும் வகையில், வரும் 17ஆம் தேதி முதல் நாடுமுழுவதும் சேவை இயக்கம் நடத்தப்படும் என்று பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், குஜராத் மாநில முதலமைச்சராக திரு. நரேந்திர மோடி கடந்த 2001ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி பதவியேற்றதை சுட்டிக்காட்டினார்.

*அக்டோபர் 7ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த சேவை இயக்கத்தில் ரத்த தான முகாம்கள், பேரணிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றும் திரு. நிதின் நபின் கூறினார்.*

*>>>>>>><<<<<<<<*

*ராஜஸ்தானில் உள்ளாட்சி நகரமன்ற தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது.*

*வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது.*

*Alwar, Bharatpur, Bikaner உள்ளிட்ட மாநகராட்சிகளிலும், ஜெய்சால்மர், பிரதாப்கட் உள்ளிட்ட பல்வேறு நகராட்சிகளிலும் தேர்தல் நடைபெறுகிறது.*

*5 ஆயிரத்து 393 வார்டுகளுக்கு நடைபெறும் இந்த தேர்தலில் 20 ஆயிரத்து 600 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.*

*57 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக, 7 ஆயிரத்து 600 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.*

*இரண்டாவது மற்றும் இறுதிகட்ட தேர்தல் நாளை மறுநாள் நடைபெறும்.*

பதிவான வாக்குகள் வரும் 15ஆம் தேதி எண்ணப்பட்டு, அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்படும்.

>>>>>>>><<<<<<<<

நேபாள பெருவெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் ஆயிரத்து 400 பேரை அடையாள கண்டறிவதற்கான டிஎன்ஏ சோதனையை, இந்திய தடய அறிவியல் குழு நடத்தியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நேபாளம் சென்றுள்ள இந்தக் குழு இதுவரை 3 ஆயிரத்து 78 டிஎன்ஏ சோதனை முடிவுகளை வெளியிட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

நேபாளத்தின் Chilime சுரங்கத்தில் மீட்பு பணிகளை இந்திய தொழில்நுட்ப குழு மேற்கொண்டு வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் சுரங்கத்தில் வெள்ளம் மற்றும் களிமண் தேங்கியிருப்பதால் மீட்பு பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது.

சுரங்கத்திற்குள் இயந்திரங்களை கொண்டு சென்று மீட்பு பணிகளை மேற்கொள்வதற்கு பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் வெளியுறவு அமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

சவுதி அரேபியா மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், இந்த தாக்குதல் சவுதி அரேபியாவின் இறையாண்மைக்கு எதிரானது என்று கூறியுள்ளார்.

இதன்மூலம் அப்பகுதியில் பதற்றம் ஏற்படும் சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

இஸ்ரேல் - பாலஸ்தீனம் பிரச்சினைக்கு இரண்டு தனி நாடு தான் தீர்வு என்று பிரிட்டன், பிரான்ஸ், கனடா நாட்டு தலைவர்கள் கூறியுள்ளனர்.

இதுதொடர்பாக பிரிட்டன் பிரதமர் திரு. Andy Burnham, பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன், கனடா பிரதமர் திரு. Mark Carney ஆகியோர் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், மேற்காசிய பகுதியில் அமைதிய நிலைநாட்ட இஸ்ரேல்-பாலஸ்தீனம் இரண்டு தனிநாடுகள் மிகவும் முக்கியமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் அந்த கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

ரஷ்யா - யுக்ரைன் இடையே அமைதி பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்க அமெரிக்கா மேற்கொண்டுள்ள தூதரக நடவடிக்கை உதவிகரமாக இருக்கும் என்று ஐ.நா பொதுச்செயலாளர் திரு. Antonio Guterres தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தூதர், ரஷ்யா மற்றும் யுக்ரைனுக்குச் சென்று இதுதொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பாக ஐ.நா செய்தி தொடர்பாளர் திரு. Stephane வெளியிட்டுள்ள அறிக்கையில், போர் நிறுத்தத்திற்காக இரு நாடுகளுடனும் ஆலோசனை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, ரஷ்யாவுடனான போர் தொடங்கிய பின்னர், யுக்ரைன் நாட்டிற்கு 226 பில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி அளிக்கப்பட்டதாக ஐரோப்பிய யூனியன் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<<

அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 600 பொருட்கள் மீது, 50 சதவீதம் வரை, வரி விதிக்கப்படும் என்று கனடா அறிவித்துள்ளது.

கனடா பொருட்கள் மீது அமெரிக்கா வரி விதித்ததற்கு பதிலடியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எஃகு, அலுமினியம், வீட்டு உபயோகப் பொருட்கள், இயந்திரங்கள் உள்ளிட்ட பொருட்கள் மீது 15 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரை வரி விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அமெரிக்க அரசு கொள்முதல் நிலையங்களில் கனடாவிலிருந்து பொருட்கள் இறக்குமதி செய்ய வேண்டாம் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கனடா நியாயமற்ற வர்த்தக நடைமுறையை கடைபிடிப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<

வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Sharma, Malvika Bansod ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் Tanvi Sharma, 21-16, 21-17 என்ற செட்கணக்கில் கனடாவின் Rachel Chan-ஐ வென்றார்.

*மற்றொரு ஆட்டத்தில் Malvika Bansod 26-24, 24-22 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Ya Cheng-ஐ வென்றார்.*

*இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் Manraj Singh, Sanskar Saraswat, Alap Mishra ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

*கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Surya-Amrutha இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*இந்தோனேஷியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண்சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>>>><<<<<<<*